குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்
(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 11/2016

அ.சா. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. பெல்லப்பா |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு. சக்கரலப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 36 |

**1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 25.07.2023**

*(எதிரி ஆஜர்)*

**முதல் விசாரணை :**

நான் நல்லகானகொத்தப்பள்ளியில் குடியிருந்து, ஓட்டுனர் தொழில் செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 12.12.2015 தேதி இரவு சுமார் 7.00 மணியளவில் ஆஜர் எதிரி தனது செல்போனை விற்பனை செய்வதாக என்னிடம் தெரிவித்தார். அதற்கு நான் என்னிடம் பணம் இல்லை, அதனால் எனக்கு செல்போன் வேண்டாம் என கூறினேன். அதற்கு எதிரி உன்னிடமே பணம் இல்லையா என கூறி தகாத வார்த்தைகளால் பேசி ராடால் என் தலை மீது அடித்தார். அதனால் நான் மயங்கி கீழே விழுந்துவிட்டேன். பின்னர் காயம்பட்ட என்னை அருண்குமார் என்பவர் ஒசூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார் அங்கு மருத்துவமனையில் 2 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகி வெளியே வந்து சூளகிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுதான் நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் ஆகும். மேற்படி புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாத காரணத்தினால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

V AGAVITHAN

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.1

Digitally signed by V AGAVITHAN

Location: HOSUR

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 11/2016

அ.சா. 2

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. பாலகுமார் (எ) பாலமுருகன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு. பாப்பண்ணா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 32 |

**1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 25.07.2023**

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை :**

நான் கோனேரிப்பள்ளி சாந்தி நகரில் குடியிருந்து, சென்டரிங் வேலை செய்கிறேன். அ.சா.1 பெல்லப்பாவை எனக்கு தெரியும், ஆஜர் எதிரியை தெரியும். 12.12.2015 தேதி இரவு சுமார் 7.15 மணிக்கு அ.சா.1க்கும், எதிரிக்கும் இடையே செல்போன் சம்மந்தமாக தகராறு ஏற்பட்டதாக தகவல் தெரிந்து அங்கு சென்றேன். நான் சென்று பார்த்த போது அ.சா.1 தலையில் அடிப்பட்டிருந்தது. அ.சா.1ஐ அருண்குமார் என்பவர் மருத்துவமனைக்கு சிசிச்சைக்காக அழைத்து சென்றார். அ.சா.1 மருத்துவமனையில் 2 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாத காரணத்தினால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

V AGAVITHAN

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.1

Digitally signed by V AGAVITHAN
Location: HOSUR